







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 21 21.05.2025





**आचार्य देवो भव (Aachayra Devo Bhava)**

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## மிக உயர்ந்த முத்துக்கள்

# உபதேசங்கள்



# மிக உயர்ந்த முத்துக்கள்

1. பிராட்டியிடம் இல்லாத குணங்களே உலகில் கிடையாது.
2. ஸ்தோத்ரம் என்பது இல்லாத குணங்களை இருப்பதாகப் பேசுவதல்ல. ஒருவனைத் துதிப்பது என்றால் அவனிடம் உள்ள குணங்களனைத்தையும் உள்ளபடியே பேசுவதுதான்.
3. உலகத்தில் ஒருவன் மிகுந்த அறிவுள்ளவனாயிருந்தால் அவனை ப்ருஹஸ்பதி என்று சொல்லி யாவரும் போற்றுகிறார்கள். ஒருவன் சிறிதும் அறிவில்லாதவனாயிருந்தால் அவனை மரம் என்று சொல்லிப் பழிக்கிறார்கள்.
4. ஜீவாத்மாக்கள் தன்னை அடைவதற்காக பகவான் கொடுத்த உடலையும், கை கால்களையும். ஐம்புலன்களையும், அறிவையும், அவனைப் பெறுவதற்கு உரிய செயல்களில் ஈடுபடுத்தாவிடில், பேரின்பத்தை அடைய முடியுமா? ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்ல, மனம் இரங்கி, ஒருவன் படகைக் கொடுத்தால் அதை அக்கரைக்குச் செலுத்தி, செல்லாமல், ஆற்றின் போக்கிலேயே செலுத்தி, அது மிக வேகமாகப் போகிறதே என மகிழ்ந்து, அவ்வழியே சென்றால் கடலை அடைந்து. அலைகளால் இழுத்தடிக்கப்பட்டு, பாறைகளில் மோதி, படகு உருக்குலைவதோடு, சென்றவனும் அழிந்துவிடுகிறான். அவனைப் போல் அன்றி. நாம் நம் உடலையும். உறுப்புகளையும், புலன்களையும் வைகுந்தம் பெறுவதற்கு உரிய வழிகளில் ஈடுபடுத்த வேண்டும்.
5. "துன்பங்களை விளைவிக்கும் தீய வழிகளில் செல்லாது அவற்றை விலக்கி நன்னெறிகளிலேயே மனதைச் செலுத்தி, தெய்வத்தால் எதிர்பாராத துன்பங்கள் நேர்ந்த பொழுது அவற்றை நண்பனுடன் தானும் சேர்ந்து அனுபவிப்பதே நட்பு" என்பர்.
6. "ஸத்துக்களுடன் சேர்ந்து பழகுவதனால், ஸம்ஸாரத்தில் ஆசை கழிகிறது. ஆசார்யன் மூலம் ச்ரிய:பதியைச் சரணம் அடைந்து, தன் ஆத்ம ஸ்வரூபத்தைப் பெற்றவனாக, தான் கோரினபடி தேஹ அவஸாந பர்யந்தம் ப்ராரப்த கர்ம பலன்களை அநுபவித்து, முன்பு அநுஷ்டித்த ப்ரபத்தியின் மஹிமையினால் பூர்வக்ருத புண்ய பாபங்கள் எல்லாம் நசித்தவன் ஆக, சரண்யனுடைய க்ருபையினால் இந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தின் துவக்கு அற்றவன் ஆகி, ஹார்தன் எனும் அந்தர்யாமியினுடைய அநுக்ரஹத்தினால் (சரீரத்தில் உள்ள) நாடிகளின் நடுவில் உள்ள ஸுஷும்நா நாடியின் வழியாகச் சரீரத்தினின்றும் வெளியே வருகிறான். பிறகு, முக்தன் ஆன இந்த ஆத்மா, அக்னி, பகல், சுக்ல பக்ஷம் உத்தராயணம், ஸம்வத்ஸரம், ஸூர்யன், சந்த்ரன், மின்னல், வருணன், இந்த்ரன். ப்ரஜாபதி எனும் இவர்களால் பூஜிக்கப் பெற்று, இந்த ப்ரக்ருதி மண்டலத்துக்கு எல்லையாக இருக்கும் விரஜை எனும் மஹாநதியில் ஸ்நானம் செய்து, சுத்தஸத்வமாய் - நித்யமாய் உள்ள ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து,

அவ்விடத்தில் ப்ரஹ்மத்துடன் - ஸ்ரீமந் நாராயணனுடன் ஸாயுஜ்யத்தை அடைந்து. மஹா ஆனந்தத்தை அவனுடன் எப்பொழுதும் அநுபவித்து வருகிறான்" என்று.
.....நடாதுர் அம்மாள்.

7. **ஆசமன நியமம் ::** ஆசமனம் பண்ணுவதற்கு வெந்நீர், நுரை உள்ள ஜலம், உப்பு கரிப்பு உள்ள ஜலம், சேற்றில் தேங்கி இருக்கும் தண்ணீர், பூ ஸம்பந்தம் இல்லாத மழை ஜலம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், ஏலக்காய் முதலிய வாஸனை த்ரவ்யங்கள் சேர்ந்த தீர்த்தம், பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்த தீர்த்தம், கஷாயம் போலக் கசப்பான ஜலம் இவை கூடா. காலை அலம்பி மீந்த ஜலம் கூடாது. அந்த ஜலத்தைக் கொண்டு ஆசமனம் பண்ண நேரிட்டால், கொஞ்சம் ஜலத்தைக் கீழே கொட்டிவிட்டுச் செம்பைச் சுத்தமான இடத்தில் வைத்துப் பிறகு எடுத்துக் கொண்டு பண்ண வேண்டும். ஆசமனம் பண்ணும்போது ஒருவரையும் பார்க்கக் கூடாது. தன்னையும் பார்த்துக்கொண்டு பண்ணக் கூடாது. பேசிக்கொண்டோ, சிரித்துக்கொண்டோ, சப்பணம் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டோ ஆஸனத்தில் இருந்துகொண்டோ, ஒரு காலை உயரத் தூக்கிக் கொண்டோ. தலையில் துணியைச் சுற்றிக்கொண்டோ, காதுகளை மூடிக்கொண்டோ ஆசமனம் பண்ணக்கூடாது. ஆசமன தீர்த்தத்தைச் சப்தத்துடன் உறிஞ்சிச் சாப்பிடக் கூடாது. நகத்தின் நுனியினால் உட்கொள்ளும் தீர்த்தம் ஸுராபானத்துக்கு ஸமம் ஆகும். தென் திசையையோ, மேற்குத் திசையையோ பார்த்துக்கொண்டு ஆசமனம் பண்ணக் கூடாது. அவ்விதம் தான் என்று வேறு ஒரு வாக்யத்தைப் பற்றி இத்தை உதாஹரணம் ஆகக் காட்டி இருக்கிறார்.

8. **தத்த்வ பதவீ**

இந்த ரஹஸ்யம் சேதநம் - அசேதநம் - ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களை அறிவதற்கு வழிகாட்டுவதால் இப்பெயர் பெற்றது. சேதநன் தான் நற்கதி பெற விரும்பினால் சிறந்த ஓர் ஆசார்யனை அடைய வேண்டும். அவன் அருளோடு செய்யும் உபதேசத்தால் மேம்பட்ட தத்துவம் - தாழ்ந்த தத்துவம் இவற்றைப் பற்றிய விளக்கமான அறிவைப் பெற வேண்டும். பின் ஸர்வேச்வரன் திருவடிகளே சாதனமாகவும் பலனாகவும் ஆவதை உணர்ந்து அவன் திருவடிகளில் சரணாகதி செய்ய வேண்டும். இதுவே சேதநன் நல்வாழ்வு பெறுவதற்கு ஏற்ற வழியாகும்.

9. **உயர்ந்த தபஸ்ஸு ::**

உலகில் நடந்ததை நடந்தபடி சொல்வது, அழியாத (ஆத்ம), தத்துவம் உள்ளதை யறிந்து உள்ளபடி சொல்வது, உபவாஸாதிகளான தவங்களை நன்கு அனுஷ்டிப்பது, வெளிப்புலன்களை அடக்குவது. மனத்தை அடக்குவது, வைதிகாக்நிகளை ஸம்பாதிப்பது, அக்நிஹோத்ரத்தை ஆசரிப்பது, அதிதிகளை ஆராதிப்பது, மனிதருக்கான

மஹோத்ஸவங்களைச் செய்வது. ப்ரஜைகளைத் தனக்கு உண்டு பண்ணிக் கொள்வது, உசித காலத்தில் தன் மனைவியோடு புணர்வது, ஸந்ததி விருத்தி செய்வது என்றிப்படியுள்ள எல்லா தர்மங்களோடும் அத்யயனம், அத்தியாபனம் என்ற இரண்டும் எல்லோருக்கும் அவசியம் வேண்டியவை. ராதீதரரென்ற ருஷி ஸத்யமே போதுமென்றார். பௌருசிஷ்டி என்பவர் தவமே-உணவைக் குறைத்து சாஸ்த்ர முறையில் உடலை உலர்த்தலே அமையுமென்றார். அததில் அவர்கள் வைத்துள்ள ஊற்றத்தினாலே அப்படி அவர்கள் சொன்னார்கள். அத்யயநாத்யாபநங்களையே மௌத்கல்ய நாகர் முக்கியமாக மொழிந்தார். இவையே ப்ரதானமான தபஸ்ஸாம். (எந்த தர்மாநுஷ்டானமும் துர்க்குணங்களை விலக்கி ஸத்துவ குணத்தை வளர்த்தி அறிவையூட்டுவதற்காகவேயாம். மற்றவை செய்யப்பட்ட போதும் அத்யயநாத்யாபநங்களே நேரில் அறிவை உண்டாக்குகிறனவாகையாலே இவையே முக்கியமான தபஸ்ஸாம்.) தைத்திரீயத்தின் முடிவிலே ந்யாஸமென்ற தபஸ்ஸே சிறந்த தென்பது வேறு.

10. '**அஹங்கார மமகாரங்கள் கழிந்து**, அசையாத கீர்த்தியும் குணங்களும் பெற்று, எம்பெருமானுக்கு போக்யமாயும் போகோபகரணமாயுமிருந்து, அறிவின் பலத்தாலே அழிவற்று நிற்பேன்' என்கிற பொருளைத் தரும் மந்த்ரமோத வேண்டும். இது த்ரிசங்குவின் உபதேசமாம்.

11. **நல்லாருடன் கூடி வாழ்**
நல்லொழுக்கம் இல்லாதவர்களோடு தீய ஒழுக்கம் உள்ளவர்களோடு ஒருபோதும் கூடி இராதே. நல்லொழுக்கம் நிறைந்துள்ள நல்லார்களுடன் அரை க்ஷணமாகிலும் கூடியிருத்தல் மிகவும் நல்லதாம். உயர்ந்தாருடனோ தாழ்ந்தாருடனோ ஒருபோதும் பகை கொள்ளக் கூடாது. ஸகர மஹாராஜனே, விவாஹமோ, விவாதமோ ஸம அந்தஸ்து உள்ளவர்களுடன்தான் கொள்ளலாம் என்பர்.

विवाहश्च विवादश्च तुल्यशीलैर्नृपेष्यते ।

விவாஹம்ச விவாதம்ச துல்யசீலைர் ந்ருபேஷ்யதே |

என்கிறார் ஔர்வர். கலஹத்தை ஆரம்பிக்கக் கூடாது. வீணான விரோதமும் கூடாது. லாபம் கருதியும் பகை வைத்துக் கொள்ளலாகாது. பகையினால் சிறிது நஷ்டம் வந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் பகையினால் வரும் லாபத்தை அடியோடு கைவிட வேண்டும்.

12. **அவச்யம் அறிய வேண்டுவன**
ஸ்நானம் செய்ததும் உடம்பை ஸ்நான சாடியினால் (துண்டினால்) துடைத்துக் கொள்ள வேண்டுமேயன்றி,

கையினால் துடைக்கக் கூடாது. பிறர் மீது மயிரில் உள்ள ஜலம் தெறிக்கும்படி மயிர்களை உதறலாகாது. நின்றுகொண்டே ஆசமனம் முதலிய கார்யங்களைச் செய்யக் கூடாது. ஒரு காலினால் மற்றொரு காலை மிதித்துக் கொள்ளக் கூடாது (கால் அலம்பும்போது ஒரு காலால் மற்றொரு காலைத் தேய்த்து அலம்புவது கண்கூடு. இதையும் தவிர்க்க வேண்டும்). பெரியோர்கள் திருமுன்பே கால்களை நீட்டக் கூடாது. விநயம் உள்ள மாணாக்கன் குருவின் முன்னிலையில் படுப்பதோ, உட்காருவதோ கூடாது. உட்காருவதானால் குருவின் முன்னிலையில் அவர் உத்தரவின் பேரில் தாழ்ந்த ஆஸனத்தில் அமரலாம். தேவாலயம், நாற்சந்தி, மங்களப் பொருள்கள், பூஜிக்கத் தகுந்தவர்கள், இவர்களைக் கண்டால் (ப்ரதக்ஷிணமாக)ப் போக வேண்டும். வலமாக இடமாக (அப்ரதக்ஷிணமாக ) ஒருகாலும் செல்லக் கூடாது. இவையல்லாத பொருள்களை (அமங்கலப்பொருள்களை) ப்ரதக்ஷிணமாகச் செல்லக் கூடாது. சந்த்ரன், ஸூர்யன், அக்னி, தண்ணீர், காற்று, பெரியோர் இவர்களுக்கு எதிரில் எச்சிலைக் காறி உமிழ்வதோ, மல மூத்ரங்களைக் கழித்தலோ செய்யக் கூடாது. இவ்வாறே நின்று கொண்டு சிறுநீர் கழிப்பதும், வழியிலே கழிப்பதும் தவறாகும். கோழை,மலம், மூத்திரம், ரத்தம் இவை நடுவழியில் இருந்தால் மிதித்துச் செல்லக் கூடாது. போஜன காலத்திலும், பலி இடும் ஸமயம், மங்களமான காலம், ஜபஹோமாதிகள் செய்யும் காலம், ஜனங்கள் திரண்டிருக்கும் காலம் ஆகிய ஸந்தர்ப்பங்களிலும் கோழை உமிழ்தல், துப்புதல் முதலியன செய்யக் கூடாதவை. பெண்களை இகழவும் கூடாது; அவர்களை நம்பவும் கூடாது. பெண்களிடம் பொறாமை கொள்ளவும் கூடாது. அவர்களை அடியோடு அநாதரவு செய்யவும் கூடாது. நல்லொழுக்கத்தை விரும்பும் பண்டிதன், மங்களப் பொருள்களான புஷ்பம், ரத்னம் முதலான உயர்ந்த வஸ்த்துக் களைக் கண்டால் அவற்றை வணங்கி வலம் வராமல் வீட்டிலிருந்து வெளியே செல்லுதல் கூடாது. ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். பல கற்றறிந்த பெரியோர்களைச் சார்ந்திருக்க வேண்டும். தேவதைகள், ரிஷிகள், பித்ருக்கள், அதிதிகள் இவர்களைத் தக்கவாறு பூஜிப்பவன் மிகச் சிறந்த உலகங்களை மறு பிறவியில் அடைகிறான். மனதை அடக்கி, ஹிதமாகவும், ப்ரியமாகவும் இருக்கும் வார்த்தைகளைத் தக்க காலத்தில் அளவுடன் சொல்லுமவன் ஆனந்தம் தரும் அழிவில்லாத லோகங்களைப் பெறுகிறான். பகுத்தறிவும், செய்யத் தகாத கார்யங்களைச் செய்வதில் நாணமும், பொறுமையும், வேதத்தில் நம்பிக்கையும், கல்வியினாலும் குலத்தினாலும் மேம்பட்டவர்களிடத்தில் விநயமும் நிறைந்துள்ள ஒருவன் ஒப்பற்ற உயர்ந்த லோகங்களை அடைகிறான். காலம் அல்லாத காலத்தில் மேக கர்ஜனம்

உண்டாகிற ஸமயத்திலும், அமாவாஸ்யை, பௌர்ணமி முதலான ஸர்வ காலங்களிலும், ஆசௌசம் முதலான தீட்டுக் காலங்களிலும், அத்யயநம் செய்யாமல் (வேதங்களை ஓதாமல்) இருக்க வேண்டும்.

